SECONDARY SCHOOL

END - OF - YEAR EXAMINATION - 2017

TAMIL LANGUAGE PAPER

SECONDARY 3 EXPRESS / 3NA

குறிப்புகள் :

1. ஒவ்வொரு வினாத் தொகுதியின் தொடக்கத்திலுள்ள குறிப்புகளைப் படித்துப் புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

2. விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைத் தாளிலேயே எழுத வேண்டும்.

பெயர் : ____________________

வகுப்பு : ________________

மதிப்பெண்கள் : / 70

இவ்வினாத்தாளில் அடங்கியுள்ள வினாக்கள் பக்கம் 2 முதல் 10 வரை அச்சிடப் பட்டுள்ளன. கடைசி வினாவின் கீழ் 'முற்றும்' என்னும் சொல் காணப்படும்.

SECONDARY 3
EXPRESS

SECONDARY 3
SET 14 / 15

More papers at www.testpapersfree.com

## TESTPAPER 14

NAME : ____________ CLASS : ________

1 மரபுத்தொடர்கள், இணைமொழிகள் (5 மதிப்பெண்கள்)
கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்றொடர்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக.

Q1 மற்றவர்கள் பழித்துக்கூறும் தீய குணம் நம்மிடம் இருந்தால், அதனை அவசியம் ____________ வேண்டும்.

Q2 விவாதப் போட்டியில் பேசும்போது ____________ தனது வாதத் திறமையைக் காட்டி, பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றார் ராஜா.

Q3 சுனாமி ஏற்பட்டபோது, இலங்கையில் தங்கியிருந்த பிரபு அங்குத் தான் ____________ அனைத்தையும் தன் நண்பனிடம் கூறினான்.

Q4 பெற்றோர் சொல்வதைக் கேட்டு நடந்துகொள்ள வேண்டுமேயொழிய, தன் கருத்திலேயே பிள்ளைகள் ____________ கூடாது.

Q5 ____________ தவிர்த்து, நேரத்தைச் சரியான வழியில் செலவிட்டால் வெற்றிமேல் வெற்றி வந்து நம்மைச் சேரும்.

(1) விட்டுக்கொடுக்க
(2) கண்டது கேட்டது
(3) வெட்டிப்பேச்சை
(4) ஓடியாடிப் பார்த்தல்
(5) ஒத்துப்பாடியே
(6) கழித்துக்கட்ட
(7) பழிவாங்குவதை
(8) எடுத்த எடுப்பிலேயே
(9) நன்மை தீமை
(10) ஒருகாலில் நிற்றல்



More papers at www.testpapersfree.com

2. வாக்கியத்தை முடித்ு எழுதுதல் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு முடித்துக் காட்டுக. அவ்வாறு முடிக்கப்பெறும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் அதற்கு முந்திய வாக்கியத்தின் கருத்தையே கொண்டிருக்க வேண்டும்.

Q6 நிலநடுக்கம், நிலச்சரிவு போன்ற இயற்கைப் பேரிடர்களால் மக்கள் அஞ்சி வாழ்கின்றனர்.

நிலநடுக்கம், நிலச்சரிவு போன்ற இயற்கைப் பேரிடர்கள் ______________________________

Q7 உலகில் உள்ள ஒவ்வொருவரும் வறுமையும் நோயுமின்றி வளமுடன் வாழ்வதற்கே விரும்புகின்றனர்.

உலகில் உள்ள ஒவ்வொருவருடைய விருப்பமும் ______________________________

Q8 இந்த உலகத்தில் ஒருவன் நன்றாக வாழ வேண்டுமானால் அதற்கு முக்கியமாக அறிவும் செல்வமும் தேவைப்படுகின்றன.

ஒருவனுக்குச் செல்வமும் அறிவும் இருந்தாலொழிய ______________________________

Q9 நடன ஆசிரியர் மாணவர்களைச் சிறப்பாக நடனமாடப் பழக்கினார்.

நடன ஆசிரியரின் உதவியோடு ______________________________

Q10 நல்லதையே நினைத்து நல்லதையே செய்தால் நம்மை இந்த உலகம் போற்றும்.

நம்மை இந்த உலகம் போற்றுவதற்கு ______________________________



More papers at www.testpapersfree.com

3 அமைப்புச் சொற்கள் (10 மதிப்பெண்கள்)

கீழ்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற அமைப்புச் சொற்கள், பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை மட்டும் எழுதுக.

மனிதனுடைய வாழ்க்கைக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருப்பது கல்வி. இக்கல்வியின் அவசியத்தை நன்கு (Q11) ______ பழந்தமிழர். கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய புலவர்கள் பலரும் கல்வியின் அருமை பெருமைகளை எடுத்துரைத்துள்ளனர். பழந்தமிழ் இலக்கியங்கள் (Q12) ______ கல்வி பற்றிய சிந்தனைகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. நாட்டை ஆளும் அரசரைக் காட்டிலும் அறிவில் சிறந்து சான்றோரையே (Q13) ______ போற்றுவர். "கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்னும் செய்யுள் அடியும் இக்கருத்தையே வலியுறுத்துகிறது.

திருவள்ளுவர், கற்றவர் முகத்தில் இருப்பதே கண் என்றும் கல்லாதவர் முகத்தில் இருப்பது புண் என்றும் குறிப்பிடுகிறார். மேலும் அவர், கல்லாதவர் விலங்குக்கு (Q14) ______ என்கிறார். பாரதிதாசன் கல்வி அறிவில்லாத இல்லத்தை 'இருண்ட வீடு' என்று பழிக்கின்றார். (Q15) ______, ஒவ்வொருவரும் கல்வி கற்க வேண்டும்; வாழ்நாள் முழுவதும் கல்வி கற்க வேண்டும். அதுவே ஒருவருக்கு அழியாச் செல்வமாகும்.

| | |
|---|---|
| (1) ஒப்பானவர் | (6) உணர்ந்திருந்தனர் |
| (2) போற்றினர் | (7) முதலானவற்றிலும் |
| (3) அமைச்சர் | (8) ஆதலால் |
| (4) பலவற்றிலும் | (9) மக்கள் |
| (5) ஆனால் | (10) உரியவர் |



More papers at www.testpapersfree.com

# பகுதி 1

கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியிற் காணும் வினாக்களுக்கு விடை தருக.

துன்பம் வரும்போது வருந்துவதும் இன்பம் வரும்போது மகிழ்வதும் எல்லா உயிர்க்கும் பொதுவானவை. ஆனால், பத்து ஆண்டுகளுக்கு முன் உற்ற துன்பத்தை நினைத்து வருந்துவதும் இன்பத்தை நினைத்து மகிழ்வதும் பறவை விலங்குகளின் வாழ்க்கையில் இல்லை. மனித வாழ்க்கையில் மட்டுமே பழைய உணர்ச்சிகளின் நினைவுகள் மீண்டும் அத்தகைய அனுபவத்தை உண்டாக்குகின்றன. அதனால்தான் மனித உள்ளத்தில் கற்பனை வளர முடிகின்றது.

நேற்று அனுபவித்த துன்பத்தை இன்று நினைத்து வருந்தும் மனம் விலங்கிற்கும் பறவைக்கும் இல்லை. நாளை வரக்கூடிய துன்பத்தை எண்ணிக் கவலைப்படும் மனமும் இல்லை. மனிதனுடைய மனம் பல ஆண்டுகளுக்கு முன் அனுபவித்த துன்ப உணர்ச்சியை மீண்டும் நினைவிற்குக் கொண்டு வந்து வருந்துவது போலவே எதிர்காலத்தில் பல ஆண்டுகளுக்குப் பின்னர் வரக்கூடிய துன்பத்தையும் எண்ணி வருந்துகிறது. ஆகவே, மற்ற உயிர்களின் வாழ்க்கையில் இன்ப துன்ப அனுபவம் அவ்வப்போதைய உணர்ச்சியாய் நின்று மறைய, மனித வாழ்க்கையில் அந்த அனுபவம் என்றும் நினைந்து எய்தக்கூடிய உணர்ச்சியாக உள்ளது. இன்னொரு வகையாகக் கூறின் மற்ற உயிர்களின் அனுபவமான உணர்ச்சி ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு உரியதாக நின்று மறைய, மனிதனுக்கு அது நினைப்பின் அளவில் எல்லாக் காலத்திற்கும் உரியதாக வந்து நிற்கிறது.

இவ்வாறு காலத்தால் பரந்து கிடப்பதுபோலவே மனத்தின் அனுபவம் இடத்தாலும் பரவ வல்லதாக உள்ளது. விலங்கோ பறவையோ தன் உடல் உற்ற துன்பத்தை உணர்ந்து வருந்துவதுபோல மற்றோர் உடல் உற்ற துன்பத்தை உணர்ந்து வருந்த முடியவில்லை. துன்ப உணர்ச்சி என்பது அதற்குத் தன் உடலிலிருந்து எழ வேண்டிய ஒன்றாக உள்ளது. ஆனால், மனித உள்ளத்தின் அனுபவம் அத்தகையது அன்று. தன் காலில் பட்ட புண் உள்ளத்தை வருத்துவது போலவே, வழிப்போக்கன் ஒருவன் விழுந்ததால் ஏற்பட்ட துன்பமும் பார்த்த ஒருவனுடைய உள்ளத்தை வருத்துகிறது. இவனும் அவனும் முன்பு பழகி அறியாதவர்களாக இருக்கலாம். ஆயினும் ஓர் உடலின் துன்பம் மற்றோர் உள்ளத்தையும் தாக்குகின்றது. மனித உடலின் துன்பம் மட்டும் அல்லாமல் வேறு எந்த உயிரின் துன்பமாக இருந்தாலும் அவ்வாறே பார்த்தவன் உள்ளத்தைக் கலக்குகின்றது. ஆகவே, மனித உள்ளத்தின் அனுபவம் ஒருவரின் சொந்த வாழ்வு பற்றியது மட்டும் அன்று. பிறருடைய அனுபவங்களை எல்லாம் உணரக்கூடிய மனநிலை மனிதர்க்கு இயல்பாக அமைந்துள்ளது. இது இடத்தால் கடந்து செல்லும் உணர்ச்சி அனுபவமாகும்.



More papers at www.testpapersfree.com

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதுக.

Q16 எது எல்லா உயிர்க்கும் பொதுவான்து அல்ல ?

(1) துன்பம் வரும்போது வருந்துவது
(2) இன்பம் வரும்போது மகிழ்வது
(3) இன்ப துன்ப உணர்ச்சிகளை நி[illegible]ப்பது
(4) இன்ப துன்பங்களை அனுபவிப்பது

Q17 மனித மனத்தில் கற்பனை எப்போது வளர்கிறது ?

(1) பழைய உணர்ச்சிகளின் நினைவுகளை மீண்டும் நினைக்கும்போது
(2) நேற்று உற்ற துன்பத்தை இன்று நினைத்து வருந்தும்போது
(3) நாளை வரக் கூடிய துன்பத்தை எண்ணிக் கவலைப்படும்போது.
(4) இன்ப துன்ப உணர்ச்சிகள் அனுபவத்தை உண்டாக்கும்போது

Q18 மனித உணர்ச்சிக்குரிய தனிச்சிறப்பு என்ன ?

(1) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே நின்று மறைவது ஆகும்.
(2) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே உரியது ஆகும்.
(3) எல்லாக் காலத்திற்கும் உரியதாக வந்து நிற்பது ஆகும்.
(4) எல்லாக் காலத்திலும் நினைத்துப் பார்க்கக் கூடியதாக இருப்பது ஆகும்.

பகுதி 2



நற்குணங்களையும் வீரத்தையும் இளமையில் சிறுவர்களுக்கு எளிதாகக் கற்றுத் தர ஒன்று ண்டு. அதைத்தான் சிறுவர் இலக்கியம் என்கின்றனர். பெரிய இலக்கியங்களைப் பிற்காலத்தில் டித்துப் பயனடைய வேண்டுமானால் அவர்கள் சிறுவர் இலக்கியத்தைப் படித்துப் பயனடையக் ற்றுக்கொள்ள வேண்டும். சிறுவர் இலக்கியத்தைப் புறக்கணித்தால் வருங்காலத்தில் பிற லக்கியங்கள் புறக்கணிக்கப்படும். இன்றைய சிறுவர்களே நாளைய பெரியோர்கள்; வருங்காலச் முதாயத்தை உருவாக்கும் வன்மை பெற்றவர்கள். நாளைய தலைவர்கள் பண்புடையவர்களாகத் திகழ வேண்டுமானால் இன்றைய சிறுவர்களின் மனம் ண்படவேண்டும். இதனைச் சிறப்பாகச் செய்வது சிறுவர் இலக்கியமே.

சொர்க்கத்தின் திறவுகோல் சிறுவர்களே என்று கூறுவர். அந்தத் திறவுகோலைச் சிறப்பாக வத்திருந்து பாதுகாப்பது சிறுவர் இலக்கியமே. இலக்கியம் எங்கே வளர்ந்துள்ளதோ அங்கே ச் சிறந்த சமுதாயம் உருவாகும். எனவே, நல்லதொரு சமுதாயம் உருவாகச் சிறுவர் இலக்கியம் ன்மேலும் வளரவேண்டும்.

இளம் வயதில் சிறுவர் இலக்கியத்தை ஏன் அறிமுகப்படுத்தவேண்டும்?

(1) பிற்காலத்தில் வீரர்களாகத் திகழ
(2) பிற்காலத்தில் நற்குணங்களைப் பெற
(3) பிற்காலத்தில் வல்லவர்களாகத் திகழ
(4) பிற்காலத்தில் இலக்கியங்களைக் கற்க

இலக்கியம் எத்தகைய ஆற்றல் மிக்கது?

(1) சிறுவர்களுக்குச் சொர்க்கத்தின் திறவுகோலாய் இருப்பது
(2) சிறந்த சமுதாயத்தை உருவாக்கவல்லது
(3) குழந்தைகளை மனமகிழச் செய்வது
(4) பெரியவர்களின் மனத்தைப் பண்படுத்துவது

More papers at www.testpapersfree.com

4. பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியிற் காணும் வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை தருக.

'நீரின்றி அமையாது உலகு' என்பது சான்றோர் வாக்கு. உணவு இல்லாமல்கூடச் சிறிது காலம் உயிர் வாழலாம். ஆனால் தண்ணீர் இல்லாமல் வாழ்வது மிகக் கடினம். உணவு உண்ணாமல் சிலகாலம் தண்ணீரைப் பருகிக் கொண்டே கூட உயிர் வாழலாம். வெறும் நீரைப் பருகிக்கொண்டே உயிர் வாழ முடியும் என்பதைக் தமிழ்நாட்டில் சிலர் நிரூபித்திருக்கிறார்கள். தண்ணீர் தாகத்தைத் தணிப்பதோடு சத்தான உணவாகக்கூட அமைய முடியும் என்பதை அவர்கள் தங்கள் சந்ததிக்கும் உணர்த்தி வருகிறார்கள்.

பணத்தைத் தண்ணீர் மாதிரி செலவு செய்கிறார்கள் என்று சொல்வார்கள். தண்ணீரைப் பணம் மாதிரி கண்டபடி செலவு செய்யாதீர்கள் என்று சொல்லும் அளவுக்கு இப்போது தண்ணீரின் மதிப்பும் மரியாதையும் கூடி அதன் முக்கியத்துவத்தை இந்த உலகம் உணரும் நாள் வந்துவிட்டது. தண்ணீர்த் தட்டுப்பாடின்றி வாழும் நாம் தண்ணீருக்காகக் சிரமப்படும் மக்களை நினைத்துப் பார்க்க வேண்டும். நாம் தண்ணீரை இறக்குமதி செய்கிறோம் என்ற செய்தியையும் நினைவிற்கொள்ள வேண்டும். குழாயைத் திறக்கும் போதெல்லாம் தண்ணீர் வருகிறது என்பதற்காக அதை வீணாக்குதல் கூடாது. தண்ணீரின் முக்கியத்துவத்தை, அதன் பாதுகாப்பைக் குழந்தைகள் உணர வேண்டும் என்ற உயரிய நோக்கில் பொதுப் பயனீட்டுக் கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத் தொடர்புத்துறை மாணவர்கள் சிலருடன் சேர்ந்து ஓர் அருமையான திட்டத்தைத் தயாரித்துள்ளது.

இன்றைய குழந்தைகளே நாளைய பெற்றோர்கள். அவர்களுக்கு ஒரு செய்தியைச் சொல்லும்போது இளமைத் துடிப்பும் புதுமையான படைப்புத்திறனும் அதிகம் தேவைப்படுகிறது. அவ்வகையில் இளைய தலைமுறையினரான நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழக மாணவர்கள் அதே தலைமுறையினருக்குப் பாடல் வாயிலாகவும், கருத்துப் பரிமாற்ற நாடகம், புதுமையான கற்றல் கருவிகள் வாயிலாகவும் தண்ணீர்ச் சேமிப்பின் அவசியத்தைப் பரப்புவது அந்தச் செய்தி அதிகமான மக்களுக்குப் போய்ச் சேரும் நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. இந்தப்படைப்பு பிளாங்கா ரைஸ் தொடக்கப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் மத்தியில் தண்ணீர் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது. 'பல் துலக்கும்போது, குளிக்கும்போது, துணி துவைக்கும்போது, வாகனம் கழுவும்போது இப்படி நம் அன்றாட நடவடிக்கைகளில் எப்படி எல்லாம் தண்ணீர் வீணாக்கப்படுகிறது என்பதைக் குழந்தைகளுக்கு உணர்த்தி, அவர்கள் மூலமே தண்ணீர் விரயமாவதைத் தடுக்கும் ஒரு முயற்சிதான் இந்தப் புத்தாக்கமான திட்டம் ஆகும்.



More papers at www.testpapersfree.com

எதையும் சொல்லும் முறையில் சொன்னால் குழந்தைகள் குதூகலத்துடன் கேட்பார்கள் என்பதை அந்த நிகழ்ச்சியில் காண முடிந்தது. பல குழந்தைகள் தண்ணீர் பற்றிய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். தண்ணீர் அத்தியாவசிய தேவை. அதைப் பாதுகாப்பது நம்முடைய கடமை ஆகும். எல்லோருக்கும் தேவைப்படும் தண்ணீரைப் பாதுகாப்போம், அதன் மதிப்பை உணர்வோம், தண்ணீரை மகிழ்வுடன் அனுபவிப்போம் என்ற தாரக மந்திரத்துடன் புறப்பட்டிருக்கும் இந்தப் புதுமையான திட்டம் சிறந்த பலனைத் தரும் என்ற நம்பிக்கையில் ஐயமில்லை. இந்த முயற்சி நம்முடைய நீர்வளம் குறித்த விழிப்புணர்வைச் சிங்கப்பூரர்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்குப் பெரிதும் உதவும்.

(தழுவல் : தமிழ்முரசு)

<u>வினாக்கள் (25 மதிப்பெண்கள்)</u>

- தண்ணீர் மிகவும் இன்றியமையாததாகக் கருதப்படுவது ஏன்? (5)

____________________

____________________

____________________

____________________

____________________

- வளமான சிங்கப்பூரில் வாழும் நாம் எவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்? (5)

____________________

____________________

____________________

____________________

____________________



More papers at www.testpapersfree.com

. தண்ணீர் சேமிப்பின் அவசியத்தைக் குழந்தைகளுக்கு உணர்த்த எந்தெந்த வழிகள் மேற்கொள்ளப்படுகின்றன? (5)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

. இத்திட்டத்தின் மூலம் குழந்தைகளுக்கு உண்அர்த்தப்படும் கருத்து யாது? (5)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

. தண்ணீர் சேமிப்பு பற்றிய நம்முடைய உறுதிமொழி எவ்வாறு அமைய வேண்டும் ? (5)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________



More papers at www.testpapersfree.com

# TESTPAPER 14

<u>மரபுத்தொடர்கள்:</u> 1. கழித்துக்கட 2. எடுத்த எடுப்பிலேயே
3. கண்டது கேட்டது 4. ஒருகாலில் நிற்றல் 5. வெட்டிப்பேச்சை

<u>கருத்து மாறா வாக்கியம்</u>

6. மக்களின் அஞ்சி வாழ்தலுக்குக் காரணமாகின்றன.
7. வறுமையும் நோயுமின்றி வளமுடன் வாழ்வதே ஆகும்.
8. இந்த உலகத்தில் நன்றாக வாழ முடியாது.
9. மாணவர்கள் சிறப்பாக நடனம் ஆடப் பழகினர்..
10. நாம் நல்லதையே நினைத்து நல்லதையே செய்ய வேண்டும்..

<u>அமைப்புச் சொற்கள்</u>

11. 6 12. 4 13. 9 14. 1 15. 8 16. 3 17. 4 18. 3 19. 4 20. 2

<u>சுயவிடைக் கருத்தறிதல்</u>

உணவு இல்லாமல் வாழமுடியும்; ஆனால் தாண்ணீர் இல்லாமல் வாழ்வது மிகக் கடினம். உணவு உண்ணாமல் சிலகாலம் தண்ணீரைப் பருகிக் கொண்டே உயிர் வாழ முடியும் என்பதைத் தமிழர்கள் நிருபித்திருக்கிறார்கள். தண்ணீர் தாகத்தை மட்டும் தணிக்காமல் ஒரு சத்தான உணவாகக்கூட அமைய முடியும். இதனாலே தண்ணீர் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

முதலில் தண்ணீர் தட்டுப்பாடின்றி வாழும் நாம், தண்ணீருக்காகச் சிரமப்படும் மக்களை நினைத்துப் பார்க்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் சிங்கப்பூர் தண்ணீரை இறக்குமதி செய்கிறது. அதனால் தண்ணீரைப் பணம் போல் கண்டபடி செல்வு செய்யக் கூடாது. இவற்றையே நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நாம் பாடல் வாயிலாகத் தண்ணீரின் அவசியத்தைக் குழந்தைகளுக்கு உணர்த்தலாம். கருத்துப் பரிமாற்ற நாடகம் மூலமும், புதுமையான கற்றல் கருவிகள் வாயிலாகவும் உணர்த்தலாம். இது போன்ற வழிகளில் தண்ணீரின் சேமிப்பின் அவசியத்தை குழந்தைகளுக்கு உணர்த்தலாம்.

More papers at www.testpapersfree.com

19. நம் அன்றாட நடவடிக்கைகளான பல்துலக்குதல், குளித்தல், துணி துவைத்தல், வாகனம் கழுவுதல் போன்ற செயல்களின் போது தண்ணீர் வீணாக்கப்படுகின்றது என்பதே இத்திட்டத்தின் மூலம் குழந்தைகளுக்கு உணர்த்தப்படும் கருத்து ஆகும்.

20. தண்ணீரைப் பாதுகாப்பது நம்முடைய கடமை. எல்லோருக்கும் தேவைப்படும் தண்ணீரைப் பாதுகாப்போம்; அதன் மதிப்பை உணர்ந்து அதை மகிழ்வுடன் அனுபவிப்போம் என்று நம் உறுதிமொழி அமைய வேண்டும்.

More papers at www.testpapersfree.com